Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 18

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

7 ஷஃபான் 1438 ஹிஜ்ரி கமரி　4 ஹிஜ்ரத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

4 மே 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நீங்கள் உங்களது ஐந்து நேரத்தொழுகைகளை இறைவனை பார்ப்பது போல் பயபக்தியுடன் தொழுது வாருங்கள். மேலும் உங்கள் நோன்புகளை இறைவனுக்காக முழு மனதுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத்துக் கொடுக்க தகுதியுள்ள ஒவ்வொருவரும் ஸக்காத்து செலுத்துங்கள். எவர் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு எவ்வித தடையும் இல்லையென்றால் ஹஜ் செய்யவேண்டும்.**

**நீங்கள் இறைவனின் இறுதி ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள். எனவே, தன் முழுமைத் தன்மையில் உச்ச எல்லையை அடைந்த நற்பணிகளைச் செய்து காட்டுங்கள்.**

**கவனியுங்கள்! உங்களுடைய இறைவன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் அவனது படைப்புகளாயிருப்பினும் எவர் இறைவனை தேர்ந்தெடுக்கின்றாரோ அவரையே இறைவனும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். எவர் அவனிடம் செல்வாரோ அவனும் அவரிடம் வந்து விடுகிறான். எவர் அவனை கண்ணியப்படுத்துகின்றாரோ அவனும் அவரை கண்ணியப்படுத்துகிறான்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் மக்களே ! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்கும்போதுதான் வானத்தில் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுவீர்கள். ஆகவே, நீங்கள் உங்களது ஐந்து நேரத் தொழுகைகளை இறைவனைப் பார்ப்பதுபோல் பயபக்தியுடன் தொழுது வாருங்கள். மேலும் உங்கள் நோன்புகளை இறைவனுக்காக முழு மனதுடன் நிறைவேற்றுங்கள். ஸக்காத் கொடுக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் ஸக்காத் செலுத்துங்கள். எவர் மீது ஹஜ் கடமையாக்கப்பட்டிருக்கின்றதோ அவருக்கு எவ்வித தடையும் இல்லையென்றால் ஹஜ் செய்ய வேண்டும். நன்மைகளை அழகுபடுத்தி நிறைவேற்றுங்கள். தீமைகளை வெறுத்து விட்டு விடுங்கள். தக்வா என்னும் இறையச்சம் இல்லாத எந்தச் செயலும் இறைவனை அடைய முடியாது என்பதை நிச்சயமாக நினைவில் வையுங்கள். ஒவ்வொரு நன்மையின் ஆணிவேரும் தக்வா என்னும் இறையச்சமேயாகும். ஆகவே, எச்செயலில் இந்த வேர் வீணாவதில்லையோ அச்செயல் நிச்சயம் வீண் போவதில்லை.

சென்ற கால நம்பிக்கையாளர்களுக்கு சோதனைகள் ஏற்பட்டதுபோல் நீங்களும் பலவகையான துக்கம், துயரங்களால் சோதிக்கப்படுவதும் அவசியமானதாகும். ஆகவே, நீங்கள் தடுமாற்றமடையாதிருக்க எச்சரிக்கை -யாக இருங்கள். வானத்துடன் உங்களுக்கு உறுதியான தொடர்பு இருக்குமானால், பூமி உங்களுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்க முடியாது. எப்போதாயினும் உங்களுக்கு ஏதேனும் நஷ்டம் உண்டாகுமெனில் அது உங்களது கையால் உண்டான நஷ்டமே அல்லாமல், உங்கள் பகைவர்களின் கைகளால் உண்டானதல்ல. இப்பூமியில் உங்களது கௌரவம் அனைத்தையும் இழக்க நேரிட்டாலும் இறைவன் உங்களுக்கு என்றென்றும் மறைந்து போகாத கௌரவத்தையும் மதிப்பையும் நிச்சயமாக வானத்தில் அளிப்பான். ஆகவே, நீங்கள் அவனை ஒருபோதும் விட்டு விடாதீர்கள். உங்களுக்கு துக்கம் கொடுப்பதும் உங்களது அநேக நாட்டங்களிலிருந்து நீங்கள் இழப்பிற்குரியோ -ராக ஆக்கப்படுவதும் அவசியமானதாகவே இருக்கிறது. ஆகவே, நீங்கள் இவற்றைக் கண்டு மனம் கலங்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் அவனது பாதையில் உறுதியாக நிலைத்து நிற்கின்றீர்களா ? இல்லையா ? என்பதனை இறைவன் சோதிக்கின்றான். வானத்தில் மலக்குகளும் உங்களைப் புகழ வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் கொடுமைக்கு ஆளாகும்போது மகிழ்ச்சி அடையுங்கள். நீங்கள் பழித்துரைக்கப்படுவதைக் கேட்டு இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். தோல்வியைக் கண்டு இறைவனோடு உள்ள தொடர்பை முறித்து விடாதீர்கள். நீங்கள் இறைவனின் இறுதி ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள். எனவே, தன் முழுமைத் தன்மையில் உச்ச எல்லையை அடைந்த நற்பணிகளைச் செய்து காட்டுங்கள். உங்களில் சோம்பலுடையவராய் காணப்படும் ஒவ்வொருவரும் ஓர் அசுத்தமான பொருளைப்போல் ஜமாஅத்திலிருந்து புறந்தள்ளப்படுவார். மேலும், அவர் ஏக்கத்துடன் மரணிப்பார். அவரால் இறைவனுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்க முடியாது.

கவனியுங்கள் ! உங்களுடைய இறைவன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் அவனது படைப்புகளாயிருப்பினும் எவர் இறைவனை தேர்ந்தெடுக்கின்றாரோ அவரையே இறைவனும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். எவர் அவனிடம் செல்வாரோ அவனும் அவரிடம் வந்து விடுகிறான். எவர் அவனை கண்ணியப்படுத்துகின்றாரோ அவனும் அவரை கண்ணியப்படுத்துகிறான்.

ஆகவே, நீங்கள் உங்கள் உள்ளங்களை நேராக்கி நாவுகளையும் கண்களையும் காதுகளையும் தூய்மைப்படுத்தி அவன் பக்கம் வந்து விடுங்கள். அப்போது அவன் உங்களை ஏற்றுக் கொள்வான். நம்பிக்கையைப் பொருத்தவரை இறைவன் உங்களிடம் விரும்புவதெல்லாம் இறைவன் ஒருவனே என்றும், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அவனது திருத்தூதர் என்றும், அவர்கள் காத்தமுல் அன்பியாவாகவும், எல்லா நபிமார்களையும் விட மிக மேலானவராகவும் இருக்கிறார்கள் என்று நம்புவதும் ஆகும்.

மேலும், எவர் மீது முஹம்மதியத்தின் பிரதிபலிப்பு எனும் போர்வை அணிவிக்கப்பட்டிருக்கின்றதோ அவரைத் தவிர வேறு எந்த நபியுமில்லை.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

எல்லா வகையான குறைகளிலிருந்தும் முற்றிலும் தூய்மையான மனிதர் உலகில் எவருமில்லை. அல்லாஹ்வின் சத்தார் என்னும் திரையிடுபவன் என்ற பண்பே நமது குறைகளைத் திரையிடுகின்றது. மனிதனின் தவறுகள, குற்றங்கள் மற்றும் பாவங்களின் மீதான திரைகள் விலக்கப்பட்டு விட்டால் எவரும் எவரிடமும் முகம் காட்டுவதற்குத் தகுதியானவராக இருக்க மாட்டார். அல்லாஹ் மனிதனின் குறைகளைத் திரையிடுபவனாகவும், பாவங்களை மன்னிப்பவனாகவும் இருக்கின்றான். அவன் நம் மீது கருணை காட்டியவாறு இந்த துஆவை கற்றுத் தந்துள்ளான். நீங்கள் தவறிழைக்காமலும், குற்றம் புரியாமலும் இருப்பதற்கு முயற்சி செய்வதுடன் இஸ்திக்ஃபார் எனும் பாவமன்னிப்பையும் வேண்டுவதில் ஈடுபடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யும்போது நான் உங்களின் பாவங்களை மன்னித்து உங்களின் குறைகளின் மீது திரையிட்டவாறு உங்களது துஆக்களையும் ஏற்றுக் கொள்வேன் என்று அவன் கூறுகின்றான்.

குறைகளைக் கண்டு விட்டு அதனை பரப்புவதற்குப் பகரமாக அனைவரும் இஸ்திக்ஃபார் அதாவது பாவமன்னிப்புக் கோர வேண்டும். அல்லாஹ் தேவைகளற்றவனாவான். நம்மிடம் எண்ணற்ற பலவீனங்கள் உள்ளன. அவை பகிரங்கமாகி விடக்கூடாது என அச்சப்பட வேண்டும். மனிதன் நல்லெண்ணத்துடன் பிறரின் குறைகளைத் திரையிடும்போது, அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொள்பவராக அவர் ஆகி விடுகின்றார்.

எனது பலவீனம் இன்ன பொறுப்பாளரின் மூலமாக பகிரங்கப்படுத்தப்பட்டது மக்களுக்கு தெரிய வந்தது என்ற உணர்வு எந்தவொரு நபருக்கும் ஏற்படாவண்ணம் நீங்கள் பணி செய்ய வேண்டும். இந்த உணர்வு உருவாகி விட்டால் அதன் எதிர் விளைவு மிகவும் கடுமையானதாக இருக்கும். அந்நிலையில் எவர்களிடம் சீர்திருத்தப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் திரைகளை அகற்றி சமூகத்தில் சீர்கேட்டினை உருவாக்குவதுடன் மட்டுமல்லாமல் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தையும் சம்பாதிப்பவர்களாக இருப்பர்.

நாம் அல்லாஹ்வின் சத்தார் (குறைகளைத் திரையிட்டு மறைப்பவன்) என்ற பண்பிலிருந்து அருளைப் பெற வேண்டும் என்றால் நாம் சுயமே மற்றவர்களின் குறைகளை மறைப்பது அவசியமானதாகும்.

சமூகத்தின் தீமைகளை அகற்றுவதற்கும், சமூகத்தில் அன்பு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் தீமைகள் திரையிடப்படுதல் வேண்டும். சிறப்புகளைப் பரப்ப வேண்டும். சிறப்புகளைப் பரப்புவதில் நன்மைக்கான தூண்டுதல் ஏற்படும். சமூகத்தில் நன்மையைப் பரப்புவதே ஓர் உண்மையான முஸ்லிமின் செயல்பாடாக இருக்க வேண்டும். வெறும் நாவின் சுவைக்காகவும், தற்காலிகமான மற்றும் செயற்கையான இன்பத்திற்காகவும் அல்லது மகிழ்ச்சிக்கான சூழலை உருவாக்குவதற்காகவும் பிறரின் குறைகளைப் பரப்புவது மாபெரும் பாவமாகும் அல்லது பொது சபையில் எள்ளிநகையாடலுக்கான சூழலை உருவாக்கி பிறரை கேலி, கிண்டல் செய்வது மிகப்பெரிய பாவமாகும். இதிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் விலகி நிற்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பார்வையில் ஒருவர் அஹ்மதியாகி விடுவது அல்லாஹ் அவரை ஒப்புக் கொண்டதை வெளிப்படுத்துகின்றது. அல்லாஹ் அவரை ஒப்புக் கொண்டு விட்ட பிறகு அவரின் தனிப்பட்ட குறைகளைத் தேடிக் கண்டறிந்து அதனைப் பரப்புவதற்கு எவருக்கும் உரிமையில்லை. பிறரின் குறைகளைத் தேடி அலைவதற்கும் வேவு பார்ப்பதற்குமுள்ள உரிமை அவருக்கு இல்லை அல்லது மக்கள் மத்தியில் அவருக்கு எதிராக வெறுப்பை வெளிப்படுத்துவதற்கும் உரிமையில்லை.

திருக்குர்ஆன், நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் மற்றவர்களின் குறைகளைத் தேடி அலைவது, வேவு பார்ப்பது மற்றும் அவற்றைப் பரப்புகின்ற தீய பழக்கத்திலிருந்து தவிர்ந்திருப்பது குறைகளை மறைக்கும் பண்பைக் கடைபிடிப்பது மற்றும் இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் கவனத்தை செலுத்துவது ஆகியவை தொடர்பாக ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள போதனைகள்.

பாகிஸ்தானிலுள்ள நன்கானா சாஹிப் ஜமாஅத்தின் தலைவரான மதிப்பிற்குரிய வழக்குரைஞர் மலிக் சலீம் லத்தீஃப் சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 31 மார்ச் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **31 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

எல்லா வகையான குறைகளிலிருந்தும் முற்றிலும் தூய்மையான மனிதர் உலகில் எவருமில்லை. அல்லாஹ்வின் சத்தார் என்னும் பண்பே நமது குறைகளைத் திரையிடுகின்றது. மனிதனின் தவறுகள, குற்றங்கள் மற்றும் பாவங்களின் மீதான திரைகள் விலக்கப்பட்டு விட்டால் எவரும் எவரிடமும் முகம் காட்டுவதற்குத் தகுதியானவராக இருக்கமாட்டார். அல்லாஹ் மனிதனின் குறைகளைத் திரையிடுபவனாகவும், பாவங்களை மன்னிப்பவ–னாகவும் இருக்கின்றான். அவன் நம் மீது கருணை காட்டியவாறு இந்த துஆவை கற்றுத் தந்துள்ளான். நீங்கள் தவறிழைக்காமலும், குற்றம் புரியாமலும் இருப்பதற்கு முயற்சி செய்வதுடன் இஸ்திக்ஃபார் எனும் பாவமன்னிப்பையும் வேண்டுவதில் ஈடுபடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யும்போது நான் உங்களின் பாவங்களை மன்னித்து உங்களின் குறைகளின் மீது திரையிட்டவாறு உங்களது துஆக்களையும் ஏற்றுக் கொள்வேன் என்று அவன் கூறுகின்றான். பொதுவாக ஏராளமான விஷயங்களில் அனைவரின் குறைகளையும் இறைவன் திரையிட்டே வருகின்றான். ஆயினும் குறிப்பாக எவர்கள் இஸ்திக்ஃபார் எனும் பாவமன்னிப்பை வேண்டக் கூடியவர்களாக இருக்கின்றார்களோ அவர்களை அல்லாஹ்வின் கருணை சூழ்ந்து கொள்கிறது. கஃபர் என்பதன் பொருளே மறைத்தல் மற்றும் திரையிடுதல் என்பதாகும். ஏறக்குறைய சத்தார் என்பதற்கும் இதே பொருள்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இஸ்லாம் எடுத்துரைக்–கின்ற இறைவன் மற்றும் முஸ்லிம்கள் நம்புகின்ற இறைவன் எத்தகையவன் என்றால் அவன் மேன்மேலும் கருணை காட்டுபவன் ஆவான். அவன் கண்ணிய–மிக்கவனாவான். அடியாரின் மீது அருள்பாலிப்பவன் ஆவான். அவன் குறைகளைத் திரையிட்டு மன்னிப்பவன் ஆவான். மேலும் எந்த நபர் உண்மையான தவ்பா செய்கின்றாரோ அவரின் தவ்பாவை அவன் ஒப்புக் கொள்கின்றான். மேலும் அவரது பாவங்களை அவன் மன்னித்து விடுகின்றான்.

ஆனால், உலகில் தனது உடன்பிறந்த சகோதரனாக இருந்தாலும் சரியே அல்லது தமக்கு நெருக்கமான அன்பிற்குரியவரிடம் தமது உறவினரிடம் ஒருமுறை ஒருவர் ஒரு குற்றத்தைக் கண்டு விட்டால் பின்னர் குற்றமிழைத்த அந்த நபர் தமது குற்றத்தில் இருந்து விலகி விட்டாலும் கூட அவர் அவரை குறையுடையவனாகவே பார்க்கின்றார். ஆக, ஒரு நபர் தமது ஒரு பாவம் அல்லது குற்றத்தைக் கை விட்டு விட்டாலும் கூட அவரை குறையுடையவர் என்றும், சந்தேகக் கண் கொண்டும் உலகியல்வாதிகள் பார்க்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஆனால் இறைவன் எத்தகைய அருளாளன் என்றால் மனிதன் ஆயிரக்கணக்கான தவறுகளைச் செய்து விட்டு அவன் பக்கம் முகம் திருப்பினாலும் கூட அவன் அவரை மன்னித்து விடுகின்றான். உலகில் நபிமார்களைத் தவிர வேறெந்த மனிதனும் அல்லாஹ்வின் பண்புகளை முழுமையாக மேற்கொள்வதில்லை. அல்லாஹ் பொறுத்தருளும் அளவிற்கு நபிமார்களைத் தவிர வேறெவரும் பொறுத்தருள்வதில்லை. அல்லாஹ்வுக்குப் பிறகு நபிமார்களால் மட்டுமே இவ்வாறு செய்ய முடிகின்றது. அவர்களைத் தவிர வேறெவரும் செய்வதில்லை.

இன்னும் சொல்லப்போனால் அன்றாட நிகழ்வுகள், பொதுவாக ஸஅதி எனும் பாரசீகக் கவிஞர் கூறியபடியே

உள்ளது. அதன் பொருள்: இறைவன் எல்லாவற்றையும் அறிந்திருந்தும் மன்னிக்கின்றான். ஆனால் மனிதனோ சக மனிதனின் பலவீனத்தைப் பற்றி சிறிதளவே அறிந்து கொண்டு அதனைப் பரப்பத் தொடங்கி விடுகின்றன். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 178; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சக்கப்பட்டது)

ஸஅதி அவர்களின் இந்தக் கவிதையைக் குறிப்பிடும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிறிதோர் இடத்தில் அதற்கு இவ்வாறு விளக்கமும் தந்துள்ளார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனுடைய திரையிடுதல் எனும் பண்பு எத்தகையது என்றால் இறைவன் மனிதனின் தவறுகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். ஆயினும் தனது சத்தார் என்னும் குறைகளை மறைப்பவன் என்ற பண்பின் காரணமாக மனிதன் வரம்பு மீறாதை வரை அவனது குற்றங்களை மறைக்கின்றான். ஆனால் மனிதனோ, சக மனிதனின் தவறுகளை நேரில் பாப்பதற்கு முன்னரே அதைப் பற்றி கூச்சலிடத் தொடங்கி விடுகிறான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 299-300; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சக்கப்பட்டது)

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே இறைவனது பரிவு மற்றும் கருணை என்பது எவ்வளவு மகத்துவமிக்க பண்புகள் என்பதை நீங்கள் சீர்தூக்கிப் பாருங்கள்! அவன் பிடிக்கத் தொடங்கினால் எவரும் தப்பிக்க முடியாது. அனைவரையும் அழித்து விடுவான். ஆனால் அவனது பரிவும் கருணையும் மிகவும் பரந்ததாகும். அவை அவனது கோபத்தை விட மிகைத்து நிற்கின்றன. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 179; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சக்கப்பட்டது)

எனவே இவ்விஷயத்தை நாம் புரிந்து கொண்டு நாம் நமது நண்பர்கள், சகோதரர்கள் மற்றும் நம்முடன் தொடர்பு வைத்திருப்பவர்களின் விவகாரங்களை எந்நேரமும் ஆராயாமல் இருந்தால், பிறரின் பலவீனங்களை துருவித் துருவி ஆராயாமல் இருந்தால் அந்நிலையில் அன்பு மற்றும் அமைதி நிறைந்த சுற்றம் நிலைபெற முடியும். நம்மில் பலர் எப்படிப்பட்டவர்கள் என்றால், பிறரின் குறைகளை மறைப்பதற்குப் பதிலாக அதனை வெளிப்படுத்துகின்ற முனைப்பிலேயே இருக்கின்றனர். ஆனால் அவர்களைப் பற்றி எவராவது ஏதாவது பேசி விட்டால் அல்லது இன்ன நபர் என்னைப் பற்றி இவ்வாறு பேசியுள்ளார் என ஏதாவது ஒரு வகையில் அவர்களுக்கு தெரிய வந்தால் அவர்கள் மிகவும் கர்வம் கொள்கின்றனர். மிகவும் கோபத்திற்குள்ளாகி மடிவதற்கும், கொலை செய்வதற்கும் கூட தயாராகி விடுகின்றனர். இது தம்மைப் பற்றி பிறர் பேசினால் அவ்விவகாரங்களில் இவர்களின் நிலையாகும். ஆனால் அவர்கள் பிறரைப் பற்றி பேசிய விவகாரங்களில் இது மிகச் சாதாரண விஷயமாகும். அதனை தாமாகவே நாம் கூறினோம் என விளக்கம் கொடுக்கின்றனர்.

நீங்கள் உங்களுக்கு எதனை விரும்புகின்றீர்களோ அதனையே உங்களது சகோதரர்களுக்காகவும் விரும்புங்கள் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலை எந்நேரமும் நாம் நம் கண் முன் நிறுத்த வேண்டும். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான் பாபு மினல் ஈமானி அன்ய்யுஹிப்பு லி அஹீஹீ மா யுஹிப்பு லி நஃப்ஸிஹீ ஹதீஸ் 13) எனவே, குறைகளைத் திரையிடுதலை நீங்கள் உங்களுக்கு விரும்பினால், பின்னர் உங்களிடம் மற்றவர்கள் விவகாரங்களிலும் அதே உணர்வு மிகைத்திருக்க வேண்டும். இந்த அற்புதமான போதனையே சமூகத்தின் அமைதிக்கு மிக அவசியமானதாகும். எனவே குறைகளைக் கண்டு விட்டு அதனை பரப்புவதற்குப் பகரமாக அனைவரும் இஸ்திக்ஃபார் அதாவது பாவமன்னிப்புக் கோர வேண்டும். அல்லாஹ் தேவைகளற்றவனாவான். நம்மிடம் எண்ணற்ற பலவீனங்கள் உள்ளன. அவை பகிரங்கமாகி விடக்கூடாது என அச்சப்பட வேண்டும். மனிதன் நல்லெண்ணத்துடன் பிறரின் குறைகளைத் திரையிடும்போது, அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொள்பவராக அவர் ஆகி விடுகின்றார். இறைவன் பிடிக்கத் தொடங்கி விட்டால் கணக்கெடுக்கத் தொடங்கி விட்டால் பின்னர் அவன் அனைவரையும் அழித்து விடுவான். அந்நிலையில் எவரும் தப்பிக்க முடியாது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே மிகவும் அச்சப்பட வேண்டிய விஷயமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: எவர் ஒருவர் தனது ஒரு முஸ்லிம் சகோதரரினி ஒரு குறையைத் திரையிட்டாரோ மறுமை நாளன்று அல்லாஹ் அவரது குறைகளை மறைத்து விடுவான்; மன்னித்து விடுவான். மேலும் எவர் தனது முஸ்லிம் சகோதரரின் குறைகளை வெளிப்படுத்துகின்றாரோ பிறரது தீமைகளைக் கண்டு மக்களிடம் பரப்புகின்றாரோ அல்லாஹ் அத்தகைய நபரை அவரது குடும்பத்திலேயே அவமானப்படுத்தும் அளவிற்கு அவரது குறைகளை வெளிப்படுத்தி விடுவான். (சுனன் இப்னு மாஜா கிதாபுல் ஹுதூது பாபு சத்ரு அலல் முஃமினி ஹதீஸ் 2546)

எனவே, இது மிகக் கடுமையான எச்சரிக்கை ஆகும். மிகவும் அச்சப்பட வேண்டிய விஷயமாகும். அல்லாஹ்வின் அருளை ஈர்க்க வேண்டும் என்றால் பிறரின் குறைகளைத் தேடுவதற்குப் பதிலாக எப்பொழுதும் தம்மை ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் கருணை மற்றும் அருளை நம்மால் ஈர்க்க முடியும். ஒருவரின் குறைகளைக் கண்ட பிறகு அதனை நாங்கள் வெளிப்படுத்தவில்லையென்றால் அவரது சீர்திருத்தம் எப்படி ஏற்பட முடியும்? என மக்கள் கூறுவதுண்டு.

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவரின் ஒரு தீமை ஜமாஅத் அமைப்பின் பாதிப்பிற்குக் காரணியாக உள்ளதென்றால் அல்லது சமூகத்தின் குறிப்பிட்ட சாராரை தனது தாக்கத்திற்குள்ளாக்கி சீர்கெடுக்கின்றது என்றால் அந்நிலையில் சீர்திருத்தம் செய்வதற்காக ஜமாஅத்திற்குள் நியமிக்கப்பட்டுள்ள ஜமாஅத்தின் அமீர் அல்லது ஜமாஅத்தின் சத்ர் இடம் அதனை எட்ட வையுங்கள் அல்லது எனக்கு எழுதுங்கள். சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் ஏற்பட அவ்வாறு செய்யுங்கள்.

அல்லாஹ், தான் உருவாக்கிய ஜமாஅத்தின் அமைப்பு சீர்கெடுவதை விரும்புவதில்லை. ஒரு தனிப்பட்ட தீமை சமூகத்தின் பரவலான தீமையாக மாறுவதையும் அவன் விரும்பவில்லை. எனவே, அல்லாஹ் அதுபோன்ற நபர்களின் நிர்வாணத்தை (குறைகளை) வெளிப்படுத்தி விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று எவர்கள் தாம் செய்த தவறுகளில் நிலைநிற்கின்றார்களோ பிடிவாதம் பிடிக்கின்றார்களோ தாம் செய்த தவறுகளை அல்லது பாவங்களை நியாயப்படுத்தி பரப்புகின்றார்களோ அவர்களை இறைவன் வெளிப்படுத்தி விடுகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று மனிதனின் பாவங்களை குற்றங்களை இறைவன் கண்டு கொண்டுதான் இருக்கின்றான். ஆனால் தனது பண்பின் காரணமாக சம்பந்தப்பட்ட நபர் வரம்பு மீறாத வரை அதை மறைக்கின்றான். மனிதன் தன்னைத்தானே வெளிப்படுத்தி விடும்போது, எல்லைக் கோட்டை கடந்து சென்று விடும்போது அந்நிலையில் அல்லாஹ்வின் தண்டனைக்கான பண்பு செயல்படத் தொடங்குகின்றது. அந்தப் பண்பு வெளிப்படும்போது அல்லாஹ் நாடினால் ஒன்று இவ்வுலகிலேயே அவரைப் பிடித்து விடுவான் அல்லது மறுவுலகிலும் தண்டனையை வைத்திருக்கின்றான்.

ஆனால், ஒருவரின் குறைகளைக் கண்டு அதனைப் பரப்புவது, விளம்பரப்படுத்துவது எல்லா நிலையிலும் தடுக்கப்பட்டதாகும். ஏனெனில் அவ்வாறு செய்வதால் தீமை அழிவதற்குப் பதிலாக பரவி விடுகின்றது. இது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றை எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீர் மக்களின் குறைகளைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தால் நீங்கள் அவர்களை வழிகெடுத்து விடுவீர்கள். (சுனன் அபீ தாவூது கிதாபுல் அதப் பாபு ஃபீ தஜஸ்ஸுஸி ஹதீஸ் 4888) பலவீனங்களைப் பின்தொடர்வது என்பதன் பொருள் என்னவென்றால், அதனை எல்லா இடங்களிலும் எடுத்துரைப்பது, பிறரின் குறைகளைத் துருவித் துருவி தேடுவது போன்றவையாகும். மனிதன் இவ்வாறு செய்தால் அவன் அந்த மக்களை வழிகெடுத்து விடுவான். மேலும் அத்தகைய மனிதன் சமூகத்தின் அமைதியையும் சீர்கெடுத்து விடுவான். மேலும் ஒவ்வோர் இடமாக சென்று அந்தக் குறைகளை பேசிப் பரப்பினால் எவரிடத்தில் அந்தக் குறை இருக்குமோ அந்த நபரிடம் சீர்திருத்தம் ஏற்படுவதற்குப் பகரமாக பிடிவாதம் தோன்றி விடும். பின்னர் அவர் பிடிவாதத்துடன் பிறரையும் தன்னைப் போன்ற மாற்ற அவர் முயல்வார். தனது வட்டத்தை அத்தகைய மக்கள் விரிவாக்கிக் கொண்டே செல்வர். திரையும் அகன்று விடும். திரை அகன்று விடும்போது சீர்திருத்தத்திற்கான அம்சமும் முடிந்து போய் விடும்.

எனவே எவரிடம் ஜமாஅத் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதிலும் குறிப்பாக சீர்திருத்தத் துறையினரிடம் இங்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் உச்சகட்ட எச்சரிக்கையுடனும் அனுதாப உணர்வுடனும் சீர்திருத்தப் பணிகளைச் செய்யுங்கள். எனது பலவீனம் இன்ன பொறுப்பாளரின் மூலமாக பகிரங்கப்படுத்தப்பட்டது மக்களுக்கு தெரிய வந்தது என்ற உணர்வு எந்தவொரு நபருக்கும் ஏற்படா வண்ணம் நீங்கள் பணி செய்ய வேண்டும். இந்த உணர்வு உருவாகி விட்டால் அதன் எதிர் விளைவு மிகவும் கடுமையானதாக இருக்கும். அந்நிலையில் எவர்களிடம் சீர்திருத்தப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் திரைகளை அகற்றி சமூகத்தில் சீர்கேட்டினை உருவாக்குவதுடன் மட்டுமல்லாமல் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தையும் சம்பாதிப்பவர்களாக இருப்பர். ஜமாஅத்திற்கு தொண்டாற்றவே உங்களுக்கு நான் வாய்ப்பளித்தேன். மேலும் எனது பண்பை நீங்கள் மிக அதிமாக மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களுக்கு வாய்ப்பளித்தேன். ஆனால் இங்கு நீங்களோ குறைகளை மறைத்தல் என்ற பண்பிலிருந்து விலகி

நின்று, சமூகத்தில் நிம்மதியின்மை மற்றும் குழப்பத்திற்குக் காரணமாக ஆகி விட்டீர்களே என்று அந்நிலையில் அல்லாஹ் கூறுவான்.

அல்லாஹ் குறைகளை மறைப்பதை எந்த அளவுக்கு விரும்புகிறான் என்பதைப் பற்றியும் குறைகளை மறைப்பவர்களுக்கு எவ்வாறு அருள்களை வழங்குகிறான் என்பதைப் பற்றியும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறினார்கள்: ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார். ஒருவர் மற்றவர் மீது அநீதியிழைப்பதில்லை. மேலும் தனிமையிலும் ஆதரவற்ற நிலையிலும் அவரை கை விட்டு விடுவதில்லை.

இன்று நாம் பார்க்கின்றோம். உலகில் மிக அதிகமாக முஸ்லிம்கள் தான் முஸ்லிம்கள் மீது அநீதியிழைக்கின்றனர். இது எவ்வளவு பெரிய துரதிஷ்டமாகும். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் கழுத்தை வெட்டுகிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலின் பக்கம் கவனம் செலுத்தும் முஸ்லிம் எவருமில்லை.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நபர் தனது சகோதரரின் தேவையைப் பூர்த்தி செய்வதில் முனைப்பாக இருப்பாரோ அல்லாஹ் அவரது தேவையைப் பூர்த்தி செய்கின்றான். எந்த நபர் மற்ற முஸ்லிம் சகோதரரின் துன்பத்தை அகற்றினாரோ அல்லாஹ் மறுமை நாளன்று அவரது துன்பங்களில் ஒரு துன்பத்தை அவருக்கு அகற்றி விடுவான். மேலும் எவர் ஒருவர் ஒரு முஸ்லிம் சகோதரரின் குறைகளைத் திரையிடுவாரோ அல்லாஹ் மறுமை நாளன்று அவரது குறைகளைத் திரையிடுவான். (சஹீஹ் புகாரி கிதாபுல் மஸாலிமி வல்கஸ்பி பாபு லா யஸ்லிமுல் முஸ்லிமுல் முஸ்லிமி வலா யுஸல்லமஹு ஹதீஸ் 2442)

எனவே, மேன்மேலும் கருணை காட்டுகின்ற மற்றும் கண்ணியமிக்க அந்த இறைவனின் கருணை மற்றும் பரிவை ஈர்ப்பதற்கு பிறரின் குறைகளை திரையிடுதல் என்பது உச்சகட்ட தேவையாகும்.

அடுத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பதில் இவ்வாறும் கூறினார்கள்: எந்த நபர் பிறரின் குறைகளை இவ்வுலகில் மறைத்தாரோ, அல்லாஹ் கியாமத் நாளன்று அவரது குறைகளை மறைப்பான். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா வல்அதப் பாபு பஷாரதுன் மன் சதரல்லாஹு‌த்தஆலா ஹதீஸ் 6595) அதாவது பிறரின் குறைகளை மறைப்பவரை இறைவன் நற்கூலியின்றி விட்டு விடுவதில்லை. ஒருவர் அல்லாஹ்வின் அடியாரின் குறைகளை திரையிட்டிருந்தால் பின்னர் அந்த செயல் அவரது கணக்கில் எழுதப்படும். எனது இந்த அடியார் நன்மை செய்தார் என எழுதப்படும். பின்னர் கியாமத் நாளன்று அவருக்குரிய நற்கூலி அவருக்கு கிடைக்கும். அல்லாஹ் அவரை மன்னிப்பான். இன்னும் சொல்லப்போனால், அல்லாஹ் தனது அடியாரின் மீது கருணை செய்வான். மேலும் தனது ரஹ்மத்தின் நிழலை அவர் மீது சூழச் செய்வான்.

இது தொடர்பாக அறிவிப்பில் வருகிறது: அல்லாஹ் தனது அடியாரிடம் இன்ன குற்றத்தை நீ செய்தாயா? என மறுமையில் கேட்பான். அதற்கு ஆம் என் இறைவா! நான் அதை செய்தேன் என்று அடியார் கூறுவார். அதற்கு அல்லாஹ் கூறுவான். நான் இவ்வுலகில் உனது குறைகளை மறைத்தேன். அதனால் நீ தவறான வேலை செய்தாய் என்பது உலகிற்கு தெரியாமல் போனது. இன்று இப்போது கியாமத் நாளன்றும் நான் உனது குறைகளை திரையிடுகிறேன். மேலும் உன்னை மன்னிக்கின்றேன் என அல்லாஹ் கூறுவான். (சஹீஹ் புகாரி கிதாபுல் மஸாலிமி வல்கஸ்பி பாபு கவ்லுல்லாஹித்தஆலா அல்ல.்.னத்துல்லாஹி அலல் காஸிபீன் ஹதீஸ் 2441)

ஆக, அல்லாஹ் தனது அடியார்களுடன் இவ்வாறே நடந்து கொள்கிறான். எனவே நாம் இறைவனின் சத்தார் என்னும் குறைகளைத் திரையிடுபவன் என்ற பண்பிலிருந்து பயன்பெற வேண்டும் என்றால், பிறரின் குறைகளை நாம் மறைப்பது அவசியமாகும். நான் தீமைகளிலிருந்து தூய்மையானவன்; பிறரிடமே தீமைகள் உள்ளன என்று எவரும் தம்மைப் பற்றி கருதிக் கொள்ள வேண்டாம். அல்லாஹ்வின் அருள்தான் நமது குறைகளின் மீது திரையிட்டு வைத்துள்ளது.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறிய இவ்விஷயத்தை நாம் எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: உண்மையில் இறைவன் மனிதனின் குறைகளைத் திரையிட்டு மறைக்கின்றான். ஏனெனில் அவன் சத்தார் – குறைகளை மறைப்பவன் ஆவான். மேலும் இறைவனின் சத்தார் – குறைகளை திரையிடுபவன் என்ற பண்பே ஏராளமான நபர்களை நல்லவர்களாக ஆக்கி வைத்துள்ளது. இறைவன் குறைகளை மறைக்கவில்லை என்றால் மனிதனிடம் என்னென்ன அசிங்கங்கள் ஒளிந்திருக்கின்றன என்பது தெரிந்திருக்கும்.

எனவே இவ்விஷயத்தை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். இவ்விஷயத்தை கருத்தில் கொண்டவாறு மனிதன் இஸ்திக்ஃபார் செய்வதுடன் அல்லாஹ்வின் பாவமன்னிப்பு என்ற அருளை தன் மீது சூழச் செய்ய வேண்டும். மேலும் அவனிடம் பாவமன்னிப்பை வேண்ட வேண்டும். தன்னை ஆய்வு செய்தவாறு பிறரின் குறைகளையும் கண்டும் காணாமல் இருத்தல் வேண்டும். தனது நஃப்ஸை முதலில் பார்க்க வேண்டும். பிறரின் குறைகளை வெளிக்கொணர முயலக் கூடாது. மாறாக முதலில் தன்னை ஆய்வு செய்து நான் யார்? என்று தம்மைப் பார்க்க வேண்டும். இறைவன் எவ்வாறு எனது குறைகளை திரையிட்டுள்ளானோ அதுபோல நானும் பிறரது குறைகளைத் திரையிடுவேன் என எப்போதும் சிந்திக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: மனிதனின் ஈமானின் உயர்ந்த தரம் என்னவென்றால் அல்லாஹ்வின் நற்பண்புகளை கடைபிடியுங்கள் என்ற கூற்றிற்கேற்ப இறைவனின் நற்பண்புகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் இறைவனின் நற்பண்புகளைக் கொண்டு ஒருவர் தன்னை அழகுபடுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக, இறைவனின் ஒரு பண்பு அஃபூ ஆகும். மனிதனும் பிறரின் குறைகளை மன்னிக்க வேண்டும். பிறரை மன்னிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று மென்மையாளன், கருணையாளன், கண்ணியத்திற்குரியவன் போன்ற இறைவனின் நற்பண்புகளையும் மேற்கொள்ள வேண்டும். மனிதனும் பிறர் மீது கருணை காட்ட வேண்டும். மக்களிடம் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இறைவன் சத்தார் – குறைகளைத் திரையிடுபவன் ஆவான். மனிதனும் இறைவனின் இந்தப் பண்பில் இருந்து அருளைப் பெறுவதற்கு தமது சகோதரர்களின் குறைகளையும், குற்றங்களையும் மறைத்தல் வேண்டும். தவறுகளையும் பாவங்களையும் திரையிட்டு மறைக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒருவருடைய தீமை அல்லது குறையைக் கண்டால் எதுவரை அதனை நன்றாக பகிரங்கப்படுத்தி அதனை பரப்பி விடுவதில்லையோ அதுவரை சிலருக்கு உண்ட உணவு செரிப்பதில்லை.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: எவர் தனது சகோதரரின் குறைகளை மறைக்கின்றாரோ இறைவன் அவரது குறைகளை மறைக்கின்றான் என ஹதீஸில் வந்துள்ளது. மனிதனிடம் வெட்கமற்ற தன்மை இருத்தல் கூடாது. அவன் படைப்பினத்துடன் தீய முறையில் நடந்து கொள்ளக் கூடாது. அன்புடனும், நன்மையுடனும் பிறருடன் பரிமாற வேண்டும். (மல்.்.பூஸாத் தொகுதி 10 பக்கம் 339-340; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சக்கப்பட்டது)

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சபையில் இன்ன நபரிடம் இன்னன்ன குறைகள் உள்ளன என ஒருவர் கூறினார். அன்னார் அவ்விஷயங்களைக் கேட்டு விட்டு அதனை கூறிய நபரிடம் கூறினார்கள். நீர் அவரின் குறைகள் அனைத்தையும் கூறி விட்டீர். மிக உணர்ச்சி பொங்க கூறி விட்டீர். அவரது குறைகளைப் பட்டியலிட்டு விட்டீர். அத்துடன் அவரது சிறப்புகளையும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்குமே! அவரிடம் சிறப்புகளும் இருந்திருக்குமே! அதனையும் குறிப்பிட்டிருக்கலாமே! எனக் கூறினார்கள். (திக்ரே ஹபீப் பக்கம் 57)

ஆக, சமூகத்தின் தீமைகளை அகற்றுவதற்கும், சமூகத்தில் அன்பு மற்றும் அமைதியை நிலைநாட்டு –வதற்கும் தீமைகள் திரையிடப்படுதல் வேண்டும். சிறப்புகளைப் பரப்ப வேண்டும். சிறப்புகளைப் பரப்புவதில் நன்மைக்கான தூண்டுதல் ஏற்படும். சமூகத்தில் நன்மையைப் பரப்புவதே ஓர் உண்மையான முஸ்லிமின் செயல்பாடாக இருக்க வேண்டும். வெறும் நாவின் சுவைக்காகவும், தற்காலிகமான மற்றும் செயற்கையான இனபத்திற்காகவும் அல்லது மகிழ்ச்சிக்கான சூழலை உருவாக்குவதற்காகவும் பிறரின் குறைகளைப் பரப்புவது மாபெரும் பாவமாகும் அல்லது பொது சபையில் எள்ளிநகையாடலுக்கான சூழலை உருவாக்கி பிறரை கேலி, கிண்டல் செய்வது மிகப்பெரிய பாவமாகும். இதிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் விலகி நிற்க வேண்டும்.

நாங்கள் மனித இனத்திற்கு நாவினாலோ கைகளினாலோ அல்லது வேறு வகையினாலோ துன்பம் தர மாட்டோம் என நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் உடன்படிக்கை செய்திருக்கும்போது அதனைப் பேணுவதும் அவசியமாகும். (இஸாலே அவ்ஹாம் தொகுதி 3 பக்கம் 564) நாவினால் ஏற்படும் வடு நீண்ட நாள்கள் வரை நிலைபெற்றிருக்கின்றது. மக்களை ஏளனம் செய்வதும் அவர்களின் குறைகளைப் பரப்புவதின் தாக்கமும் சிலமுறை நிரந்தரமாகவே நிலைபெற்று விடுகின்றது.

எனவே நாம் மிக அதிகமாக எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். உண்மையான அனுதாப உணர்வும், நலம் விரும்புவதும் நமது சகோதரர் –களுக்காக நமது உள்ளத்தில் இருக்க வேண்டும். தமது சகோதரர்களின் பலவீனங்களின் மீது திரையிடப்படும்போதுதான் உண்மையான அனுதாபமும் நலம் விரும்புதல் எனும் உணர்வும் வெளிப்பட முடியும். விளையாட்டாகவோ அல்லது வேண்டுமென்றோ பிறரின் குறைகளை வெளிப்படுத்தவோ அல்லது

பிறரை ஏளனம் செய்யவோ கூடாது. ஆயினும் ஒருவரின் பலவீனத்தைக் கண்டு அவரின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்வது உண்மையான அனுதாபத்தின் தேட்டமாகும். அதன் மூலம் அந்த தீமை அல்லது பலவீனம் அந்த நபரிடமிருந்து அகன்று விடும். அந்த தீமையின் தாக்கம் சமூகச் சூழலின் மீது ஏற்படும் என்றால் அதன் மூலம் சுற்றமும் பாதுகாக்கப்படும். இதுவே உண்மையான நன்மை ஆகும். மேலும் அது அல்லாஹ்வின் அருளை பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்விஷயங்களில் நம்மை எங்ஙனம் காண விரும்புகின்றார்கள்? அது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: எவரை பலவீனமானவரகளாக நீங்கள் காண்பீர்களோ அவருக்கு மறைமுகமாக அறிவுரை செய்யுங்கள். அதாவது அமைதியாக தனிமையில் அறிவுரை செய்யுங்கள். அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவருக்காக துஆ செய்யுங்கள். அறிவுரை செய்யுங்கள் ஏற்றுக் கொண்டார் சரி. அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவருக்காக துஆ செய்யுங்கள். ஆனால் அவ்விரண்டு விஷயங்களினாலும் பயனில்லை என்றால் அதாவது அறிவுரை செய்தும் பயனில்லை; துஆ செய்தும் பயனில்லை என்றால் பின்னர் என்ன செய்வது? அந்நிலையில் அதனை இறை நியதி எனப் புரிந்து கொள்ள வேண்டும். இறைவன் அவர்களை ஒப்புக் கொண்டிருக்கும்போது நீங்கள் ஒருவரின் குறைகளைக் கண்டு பெரும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடாது. அல்லாஹ் அவரை ஒப்புக் கொண்டிருக்கின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஒப்புக் கொள்ளும் பாக்கியத்தை அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ளான். அன்னாரது ஜமாஅத்தில் அவரை அவன் இணைத்துள்ளான். அந்த தீமையின் காரணமாக அவருக்கு ஏற்பட வேண்டிய அவமரியாதை ஏற்படவில்லை. மாறாக அவரது குறைகள் மறைக்கப்படுகின்றன. உமக்கு மட்டுமே அந்த குறை தெரிய வந்துள்ளது என்றால் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்த உங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. அமைதியாக இருங்கள். இறைவன் அவரது சீர்திருத்தத்திற்கான ஏதாவது ஒரு வழியை தானே ஏற்படுத்தி விடுவான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: அந்த நபர் திருந்துவதற்கு வாய்ப்புள்ளது. ஏதாவது ஒரு நேரத்தில் அவர் திருந்தி விடுவார்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பார்வையில் ஒருவர் அஹ்மதியாகி விடுவது என்பது அல்லாஹ் அவரை ஒப்புக் கொண்டதை வெளிப்படுத்துகின்றது என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கருதினார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. அல்லாஹ் அவரை ஒப்புக் கொண்டு விட்ட பிறகு அவரின் தனிப்பட்ட குறைகளைத் தேடிக் கண்டறிந்து அதனைப் பரப்புவதற்கு எவருக்கும் உரிமையில்லை. பிறரின் குறைகளைத் தேடி அலைவதற்கும் வேவு பார்ப்பதற்குமுள்ள உரிமை அவருக்கு இல்லை அல்லது மக்கள் மத்தியில் அவருக்கு எதிராக வெறுப்பை வெளிப்படுத்துவதற்கும் உரிமையில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அந்த நபர் திருந்தி விடுவது சாத்தியம் எனக் கூறியுள்ளார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இன்னும் சொல்லப்போனால் இதன் தொடர்ச்சியாகவே ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சில நேரத்தில் குதுப் மற்றும் அப்தால் எனும் ஆன்மீக சான்றோர்களிடம் கூட சில குறைகள் வெளிப்பட்டு விடுகின்றன. பெரிய பெரிய குதுப், அப்தாலிடம் கூட குறைகள் வெளிப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால் 'குதுப்' ஆக அதாவது ஆன்மீக பெரியவராக இருப்பவர் கூட சில நேரத்தில் விபச்சாரம் செய்து விடுகிறார் என்று கூறப்பட்டிருக்–கின்றது.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஏராளமான திருடர்களும், விபச்சாரம் செய்தவர்களும் இறுதியில் குதுப்களாகவும் அப்தால்களாகவும் அதாவது ஆன்மீகப் பெரியோர்–களாகவும் மாறி விட்டனர். எனவே அவசரத்தைக் கையாண்டு ஒருவரைப் புறக்கணிப்பது எமது வழிமுறையல்ல. ஒருவரது பிள்ளை சீர்கெட்டு விட்டால், அதனை சீர்படுத்த அவர் முழுமையாக முயற்சியை மேற்கொள்வார். அதுபோன்று தனது எந்தவொரு சகோதரரையும் புறக்கணித்தல் கூடாது.

பிள்ளைகளை சீர்திருத்த முயல்வதுபோன்று சகோதரர்களின் குறைகளை நீக்குவதற்கும் முழுமையாக முயற்சி செய்தல் வேண்டும். முயற்சியும் துஆவும் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப் போனால், அவரின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்ய வேண்டும். குறைகளைக் கண்டு பரப்புங்கள். பிறரிடம் அதைப் பற்றி பேசிக் கொண்டு திரியுங்கள் என்று ஒருபோதும் திருக்குர்ஆன் போதிக்கவில்லை. மாறாக, 'அவர்கள் பொறுமை மற்றும் கருணையைக் கொண்டு அறிவுரை கூறுவார்கள்' என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. (90:18)

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: மர்ஹமா – கருணை என்பதன் பொருள் என்னவென்றால் பிறரின் குறையைக் கண்டு அவருக்கு அறிவுரை செய்வதும் அவருக்காக துஆ செய்வதுமாகும். துஆவில் பெரும் தாக்கம் உள்ளது.

ஒருவர், மற்றவரின் குறையை நூறு முறை பேசுகிறார். ஆயினும் ஒருமுறை கூட அவருக்காக துஆ செய்யவில்லையென்றால் அத்தகைய நபர் மிகவும் பரிதாபத்திற்குரியவராவார். ஒருவரது குறையைப் பேசுவதற்கு முன் குறைந்தபட்சம் அவருக்காக அழுதழுது 40 நாட்கள் துஆ செய்திருக்க வேண்டும். இதன் மூலம் இங்கு குறைகளைப் பரப்புவதற்கு அனுமதி கிடைத்து விட்டது என்பது இதன் பொருளல்ல. மாறாக, அதன் பொருள் என்னவென்றால், சீர்திருத்தம் செய்பவர்களிடம் ஒருவரைக் குறித்து புகார் கொடுக்க வேண்டும் என்றால் முதலில் நீங்கள் அறிவுரை மற்றும் துஆவின் மூலமாக முயற்சி செய்யுங்கள். பிறகு புகார் கொடுங்கள் என்பதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறு நாம் கூறுவதன் பொருள் குறைகளை ஆமோதியுங்கள் என்பதும் அல்ல. குறைகளைக் கண்டு அதனை ஆமோதிக்கத் தொடங்கி விடுங்கள் என்பது ஒருபோதும் நமது கருத்தல்ல. எவரிடம் குறைகள் உள்ளதோ அது மிக நல்ல விஷயம் என ஏற்றுக் கொள்ளும்படி நாம் கூறவில்லை. மாறாக அதனை பரப்பவும், அவரைப் பற்றி புறம் பேசவும் செய்ய வேண்டாம் என்றே நாம் கூறுகின்றோம். ஒரு குறையைக் கண்டு விட்டு அதனை பரப்ப வேண்டாம். மக்களுக்கு முன்னும் கூட பேச வேண்டாம். முதுகுக்குப் பின்னாலும் பேச வேண்டாம். ஏனெனில் அது பாவம் என்று அல்லாஹ்வின் வேதத்தில் வந்துள்ளது. குறைகளைப் பரப்புவதும், புறம் பேசுதலும் பாவமாகும்.

ஷேக் ஸஅதி அவர்களுக்கு இரு சீடர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் இறை ஞானங்களை எடுத்து வைப்பவராக இருந்தார். மிகவும் திறமைசாலியாக இருந்தார். அறிவும், திறமையும் அவருக்கு இருந்தது. இரண்டாம் நபரிடம் அந்த அளவுக்கு திறமைகள் இல்லாமல் இருந்தது. எனவே பொறாமைப்பட்டுக் கொண்டேயிருந்தார். அதாவது ஒருவரோ மிகவும் புத்திசாலியாக இருந்தார். இரண்டாம் நபர் அந்த அளவிற்கு புத்திசாலியாக இருக்கவில்லை. எனவே நான் கூறியது போன்று இரண்டாம் நபர் முதலாம் நபரின் ஞானத்தைக் கண்டு அவர் மீது பொறாமை கொண்டு வந்தார். இறுதியில் ஒருநாள் முதலாம் நபர் ஷேக் ஸஅதி அவர்களிடம், நான் ஒன்றை எடுத்துரைக்கும்போது இரண்டாம் நபரது வயிறு எரிந்து கொண்டும் என் மீது பொறாமைப்பட்டுக் கொண்டும் இருக்கின்றார் எனக் கூறினார். அதற்கு ஷேக் ஸஅதி இவ்வாறு பதில் கூறினார்: பொறாமை கொண்டு ஒருவர் நரகின் வழியினை மேற்கொண்டார். அந்த நபர் பொறாமைப்பட்டதன் காரணமாக நரகத்தின் வழி நடந்தார். நீரோ புறம்பேசுகின்றீர். என்னிடம் நீர் கூறுகின்ற இந்த விஷயமும் நல்லது இல்லை. நீர் புறம் பேசி நரகின் வழி நடந்து விட்டாய். எனவே நீங்கள் இருவருமே பாவம் செய்தவர்கள் ஆவீர்கள் என அவரிடம் கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: எதுவரை பரஸ்பரம் உங்களிடையே கருணையுடன் போதனை செய்தல், துஆ மற்றும் குறைகளைத் திரையிடுதல் போன்றவற்றை நீங்கள் கைக்கொள்வ–தில்லையோ அதுவரை இந்த ஜமாஅத் நிலைபெற முடியாது. (மல்.்பூஸாத் தொகுதி 7 பக்கம் 78-79; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சக்கப்பட்டது) எனவே ஒரு பக்கம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு நம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்துவோம் என நாம் உடன்படிக்கை செய்கின்றோம். ஆனால் மற்றொரு பக்கம் உலகவாதிகளின் சமூகத்தின் தாக்கத்தின் கீழ் வந்து அல்லாஹ்வின் பண்புகளையும், கட்டளைகளையும் தம்மிடம் செயல்படுத்தவில்லையென்றால் நாம் நமது உடன்படிக்கையை முழுமை செய்யாததன் காரணமாக பாவிகளாகி விடுவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நம்மை எப்படி ஆக்க விரும்பினார்களோ அப்படி நாம் ஆகவில்லை என்பதே அதன் பொருளாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நம்மை எப்படி காண விரும்புகின்றார்கள் என்றால் நாம் நமக்கிடையில் ஒருவர் மற்றவருக்காக கருணை உணர்வை கைகொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருக்காக துஆ செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். பிறரின் குறைகளை திரையிடுபவராக நாம் திகழ வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்: ஒரு சகோதரரிடம் குறையைக் காணும்போது

அவருக்காக துஆ செய்வது நமது ஜமாஅத்தினரின் நடைமுறையாக இருக்க வேண்டும். அவ்வாறு துஆ செய்யாமல் குறைகளைப் பேசி அதனை நீட்டித்துக் கொண்டு சென்றால் அவர்கள் பாவம் செய்கின்றனர். மனிதனிடமிருந்து நீங்க முடியாத குறை என்று அப்படி என்ன குறை உள்ளது? எனவே எப்பொழுதும் துஆவின் மூலமாக பிற சகோதரர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். (மல்.'.பூஸாத் தொகுதி 7 பக்கம் 77-78; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சகக்கப்பட்டது) ஒருவர் மற்றவரிடம் குறைகளைக் கண்டு அதனை பரப்புவதற்குப் பதிலாக ஒருவர் மற்றவருக்காக துஆ செய்பவர்களாகத் திகழ்ந்து ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யும் நிலையில்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்க நினைத்த ஜமாஅத்தைச் சார்ந்த மக்களாக நாம் ஆக முடியும். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனையின்படி ஓர் உண்மையான முஸ்லிமின் நிலையும் இப்படித்தான் இருக்கவும் வேண்டும். மேலும் இந்த வழிமுறைதான் நமது பாவமன்னிப்பு மற்றும் நமது குறைகளைத் திரையிடுவதற்கான காரணிகளாக அமையும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ் வருவதற்கும், அவனது அருளை வேண்டுவதற்கும் ஒரு துஆவினைக் கற்றுத் தந்துள்ளார்கள். அதனை நாம் செய்து வர வேண்டும். அந்த துஆ இதுவாகும்:

அல்லாஹ்வே! நான் உன்னிடம் இம்மையிலும் மறுமையிலும் ஆரோக்கியத்தை வேண்டுகிறேன். எஜமானனே! நான் உன்னிடம் மார்க்கம், உலகம், செல்வம் மற்றும் குடும்ப விவகாரங்களில் மன்னிப்பையும், பாதுகாப்பையும் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! எனது பலவீனங்களை மறைப்பாயாக! எனது அச்சங்களிலிருந்து எனக்கு பாதுகாப்பு அளிப்பாயாக! அல்லாஹ்வே! முன்பும் பின்பும் வலமும் இடமும் மேலும் கீழும் எல்லா வகையிலும் எனக்கு பாதுகாப்பு அளிப்பாயாக! விண்ணிலிருந்து நீயே என்னை பாதுகாப்பாயாக! நான் கீழிலிருந்து ஏதாவது மறைமுகமான துன்பங்களுக்கு இரையாகி விடுவதில் இருந்து உனது மகத்துவத்தைக் கொண்டு உன்னிடம் அடைக்கலம் வேண்டுகிறேன். (சுனன் அபூ தாவூது கிதாபுல் அதப் பாபு மா யகூலு இஸா அஸ்பஹ ஹதீஸ் 5074)

எனவே இவ்வாறு நமக்காக இந்த துஆ செய்கின்றபோது பிறருக்காகவும் இதே விருப்பத்தை உடையவர்களாக நாம் இருக்க வேண்டும். நம்மிடம் இந்த நிலை உருவாகி விட்டால் பின்னர் அல்லாஹ் நமது துஆக்களையும் ஒப்புக் கொள்கிறான். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக அவன் நம்மை ஆக்குவானாக!

நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். அது பாகிஸ்தான் நன்கானா ஜமாஅத்தின் தலைவர் மதிப்பிற்குரிய வழக்கறிஞர் மலிக் லத்தீஃப் சாஹிப் அவர்கள் உடையதாகும். அன்னார் மலிக் மஹ்மூது ஷஃபீ சாஹிபின் மகனாவார். அன்னாரின் வயது 70. மார்ச் 30 ஆம் தேதி அதாவது நேற்று காலை 9.00 மணிக்கு தனது மகனுடன் நீதிமன்றத்திற்கு சென்று கொண்டிருந்தபோது அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் அன்னாரை துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டான்.

அன்னாரின் தந்தையாரின் இரண்டு மாமாக்க –ளான ஹஸ்ரத் ஹாஃபிஸ் நபி பக்ஷ் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் ஜமாலுத்தீன் சாஹிப் இருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் ஆவர். அந்த இரண்டு சஹாபாக்கள் மூலமாக ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் பரவியது. அன்னார் காதியானுக்கு அருகிலுள்ள சக் ஸஆதுல்லாஹ் என்றவொரு கிராமத்தைச் சார்ந்தவர் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தை பிறப்பால் அஹ்மதியாவார். இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னரே நன்கானா ஸாஹிப் எனும் இந்த இடத்தில் வந்து குடியேறினார்கள். 1948 –ல் நன்கானா ஸாஹிப் என்ற ஊரில் ஷஹீது மர்ஹூம் பிறந்தார்கள். நன்கானா ஸாஹிபில் அன்னார் தொடக்கக் கல்வி பயின்றார்கள். பின்னர் லாஹூரில் LLB பயின்று 1967 –ல் முதல் முறையாக வக்கீலாகப் பணியாற்றத் தொடங்கினார்.

சம்பவத்தன்று ஷஹீது மர்ஹூம் தனது மகன் மதிப்பிற்குரிய வழக்கறிஞர் முஹம்மது ஃபர்ஹான் அஹ்மதுடன் மோட்டார் சைக்கிளில் காலை 9.00 மணிக்கு கோர்ட்டு செல்வதற்காக புறப்பட்டார். மகன் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தார். கடைவீதியில் ஒரு சந்திப்பு உள்ளது. அதன் அருகில் வந்தடைந்ததும் ஒரு நபர் அவரை நிற்கும்படி சைகை செய்தான். அங்கிருந்த வளைவின் காரணமாக ஏற்கனவே மோட்டார் சைக்கிள் மெதுவாகவே சென்று கொண்டிருந்தது. இதற்கிடையில் சைகை காட்டிய அடையாளம் தெரியாத அந்த நபர் தனது துப்பாக்கியால் சுட்டான். மீண்டும் திரும்பி வந்து ஷஹீது மர்ஹூமின் முதுகில் தனது துப்பாக்கியால் சுட்டான். அதனால் ஷஹீது மர்ஹூமின் வலது விலா எலும்பில் குண்டடி பட்டது. மீண்டும் திரும்பி வந்து ஷஹீது மர்ஹூமின் மீது அவன் மீண்டும் சுட்டான். அதனால் மோட்டார் சைக்கிளிலிருந்து ஷஹீது மர்ஹூம் கீழே விழுந்து விட்டார். அந்த நபர் ஷஹீது மர்ஹூமின் மகன் மீது தாக்குதல் நடத்தினான். ஆனால் மகனின் மீது குண்டு படவில்லை. அதன் பிறகு தொடர்ந்து அவன் சுட்டுக் கொண்டே இருந்தான். அப்போது உரத்த குரலில் ஷஹீது மர்ஹூமின் மகன் கலிமா ஓதிக் கொண்டே இருந்தார். அருகில் நின்று கொண்டிருந்த மக்களில் எவரும் முன்னால் சென்று அந்த நபரைத் தடுக்க முற்படவில்லை. வெறும் வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தனர். இதற்கு மேல் Gas Load ஆகவில்லை. துப்பாக்கி சுடவில்லை. எனவே தாக்குதல் நடத்தியவன் தப்பி ஓடி விட்டான்.

ஆனால் அதற்குள் காயப்பட்ட நிலையில் ஷஹீது மர்ஹூம் ஷஹீதாகி விட்டார். அவர் நீதிமன்றத்தில் Reader ஆகப் பணியாற்றினார். ஷஹீதின் தந்தை இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது நன்கானா ஸாஹிபின் தஹ்ஸீலின் தலைவராக இருந்தார். எனவே இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது ஏராளமான அஹ்மதி குடும்பத்தினர் நன்கானாவில் குடியேற அன்னார் உதவி செய்தார். நன்கானாவின் ஒரு பகுதியில் அஹ்மதிகளைக் கொண்டு குடியமர்த் –தினார். அஹ்மதிய்யா தெரு என்று அன்னார் அந்தப் பகுதிக்கு பெயர் வைத்திருந்தார். ஆனால் அதற்குப் பிறகு 1974 –ல் ஜமாஅத்திற்கு எதிராக சட்டம் நிறைவேற்றப்பட்ட போது எதிரிகளின் அழுத்தத்தால் அஹ்மதிய்யா தெரு என்ற பெயரை மாற்றி கடாஃபி தெரு என பெயர் வைக்கப்பட்டது. ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு 1970 முதல் ஷஹாதத் வேளை வரை தொடர்ந்து நன்கானா சாகிப் ஜமாஅத்தின் தலைவராக தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்தது. மர்ஹூம் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார். எல்லாரிடமும் இனிய முறையில் பழகி வந்தார். விருந்தோம்பல் செய்து வந்தார். குறிப்பாக தலைமையக விருந்தாளிகளுக்கு நல்ல முறையில் விருந்தோம்பல் செய்து வந்தார். ஏழைகளுடன் அனுதாப உணர்வுடன் நடந்து கொள்கின்ற பண்பும் அன்னாரிடம் அதிகம் இருந்தது. எந்நேரமும் அனைவருக்கும் உதவி செய்யத் தயாராக இருந்து வந்தார். தொழுகையை பேணி வந்தார். கிலாஃபத்துடன் உணர்வுப்பூர்வமான தொடர்பு கொண்டிருந்தார். மிகவும் தைரியசாலியாக இருந்தார். 1989 –ல் மற்ற ஜமாஅத் உறுப்பினர்களுடன் அவருக்கும் மிகவும் அதிகமாக எதிர்ப்பை சந்திக்க நேர்ந்தது. பலரது வீட்டைக் கொள்ளையடித்து எதிரிகள் எரித்து விட்டனர். அதில் அன்னாரது வீடும் அடங்கும்.

இந்த அனைத்து வகையான எதிர்ப்பிற்கு இடையிலும் அன்னார் எப்போதும் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றார்கள். எதிரிகளை வீரத்துடன் எதிர்கொண்டு வந்தார்கள். 2010 –ல் உள்ளூரில் அஹ்மதிய்யா மஸ்ஜித் கட்டுமானப் பணியில் முழுமையாகத் தொண்டாற்றும் பாக்கியம் அவருக்கு கிடைத்தது. ஷஹீது மர்ஹூமின் மனைவிக்கும் நீண்ட காலம் லஜ்னா தலைவியாக தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இறந்து விட்டார். ஷஹீது மர்ஹூமின் மாமனார் மர்ஹூம் முஹம்மது தீன் சாஹிப் அவர்கள் மீது சாஹிவாலில் ஜமாஅத்திற்கு எதிரான பிரபலமான வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் சிறைக் கைதியாகவே சிறையில் மரணமடைந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் தனக்குப் பிறகு தனது இரண்டு மகன்களை விட்டுச் சென்றுள்ளார். அதில் ஒருவர் லாஹூரில் Civil Judge ஆக உள்ளார். இரண்டாவது மகன் முஹம்மது ஃபர்ஹான் வழக்கறிஞர் ஆகவும் தற்போது அங்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும் உள்ளார். மேலும் சமரா வகார் சாஹிபா என்ற அன்னாரின் ஒரு மகள் லாஹூரில் டாக்டராக பணிபுரிந்து வருகிறார். ஷஹீது மர்ஹூமிற்கு 3 சகோதரர்களும், 3 சகோதரிகளும் உள்ளனர். ஒரு சகோதரர் மலிக் முஹம்மது நஸீம் சாஹிப் இங்கு இலண்டனில்தான் உள்ளார். ஷஹீது மர்ஹூமின் தந்தைக்கும் டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிபின் தாயாருடன் இரத்த பந்தம் இருந்தது. ஷஹீது மர்ஹூம் மற்றும் அவரது குடும்பத்தினரின் விருப்பத்திற்கேற்ப அவர்களின் சொந்த ஊரான சாஹிவாலில் அன்னாரது நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் ஷஹீதின் அந்தஸ்தை உயர்த்துவானாக! மேலும் அன்னாரது சந்ததிகளை அவரது நன்மைகளின் வழியில் அல்லாஹ் வழி நடத்தி முன்னேறச் செய்வானாக! அஹ்மதிய்யத்தின் எதிரிகளை பிடிப்பதற்கும் அல்லாஹ் விரைவில் உரிய ஏற்பாட்டை செய்வானாக!

★ ★ ★ ★ ★

**கலீஃபத்துல் மஸீஹ் இஸ்லாத்தின் மிகச் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றார்கள். எந்த வழிமுறையின் மூலமாக மேலும் எந்த விஷயங்களை ஹுஸூர் அவர்கள் கூறியுள்ளார்களோ அது முற்றிலும் இறைவனின் விருப்பத்திற்கேற்பவே இருக்கின்றது. ஏனைய முஸ்லிம் தலைவர்களும் கூட இந்த வழிமுறைக்கேற்ப தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும்.**

**ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தி மிகவும் வலுவாக இருந்தது. மேலும் அவர்கள் உலகில் எத்தகைய ஒரு நபராகத் திகழ்கின்றார்கள் என்றால் அமைதி, சாந்தி, அன்பு ஆகியவற்றை அவர்கள் எல்லாருக்கும் விரும்புகின்றார்கள். நான் எனது உணர்வுகளை சொற்களால் விளக்கிக் கூற முடியாது.**

**ஹுஸூர் அவர்களின் இஸ்லாம் மற்றும் அமைதி தொடர்பான சொற்பொழிவு முற்றிலும் எனது சிந்தனைக்கேற்பவே இருந்தது. ஹுஸூர் அவர்களது முகத்தில் தென்படுகின்ற ஒளி மிகவும் அழகாக இருந்தது.**

# கனடாவிலுள்ள அய்வானே தாஹிரில் 22 அக்டோபர் 2016 -ல் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட, கருத்தரங்களில் கலந்து கொண்ட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் தாக்கங்கள்.

◗ Uganda Martyrs United Church of Canada -வின் பாதிரியாரான சார்லஸ் உலாங்கோ அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் பார்த்த வரையில் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் இஸ்லாத்தின் மிகச் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றார்கள். அந்த வழிமுறையின் மூலமாக மேலும் எந்த விஷயங்களை ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்களோ அவை இறைவனின் விருப்பத்திற்கு முற்றிலும் ஏற்றதாக இருக்கின்றன. ஏனைய முஸ்லிம் தலைவர்களும் கூட இந்த வழிமுறைக்கேற்ப தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். இஸ்லாம் தன்னை ஏற்றுக் கொள்பவர்களிடம் அவர்கள் ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களைக் கூட பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்த இஸ்லாமிய போதனையை நான் முதன் முறையாக கேள்விப்படுகின்றேன். மேலும் நான் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவினால் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். எல்லா மதத் தலைவர்களும் ஒன்றாக அமர்ந்து கலந்துரையாட வேண்டும் என்பது ஹுஸூர் அவர்களின் விருப்பமாகும்.

◗ எய்ல்ஸ் மால்டன் அன்டாரியோ அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்:

நான் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் சுற்றுப் பயணத்தை மிகவும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். சில மாதங்களுக்கு முன்னால் யூ.கே ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போதும் அதற்கு பிறகு கனடா ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்திலும், ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத்திற்கு வந்து பிரதமரைச் சந்தித்த சந்தர்ப்பத்திலும் கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்பது எனது உள்ளத்தின் ஆசையாக இருந்தது. இன்று சந்திப்பு நிகழ்ந்து விட்டது. ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தி மிகவும் வலுவானதாக இருந்தது. மேலும் அவர்கள் உலகில் எத்தகைய ஒரு நபராகத் திகழ்கின்றார்கள் என்றால் அமைதி, சாந்தி, அன்பு ஆகியவற்றை அவர்கள் எல்லாருக்கும் விரும்புகின்றார்கள். நான் எனது உணர்வுகளை சொற்களால் விளக்கிக் கூற முடியாது.

◗ ஓய்வு பெற்ற ஆசிரியரான பாய்டி மினியூட்டி அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்.

கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களைச் சந்தித்த பிறகு நான் உணர்வுகளால் நிரம்பி காணப்படுகின்றேன். நான் ஹுஸூர் அவர்களின் அமைதியை விரும்புகின்ற தூதுச் செய்தியால் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். நாம் ஹுஸூர் அவர்கள் கூறுவதைக் கேட்டு செயல்படுவதாக இருந்தால் ஹுஸூர் அவர்கள் நம் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்கின்றார்கள்.

◗ கிரேக் கென்னடி அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுததியவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் இன்று எனது சகோதரியுடன் வந்துள்ளேன். ஏனென்றால் சில நாட்களுக்கு முன்புதான் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகள் என்ன? என்பதை நாங்கள் பார்க்க விரும்பினோம். ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தியைக் கேட்டு எனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் இருந்தது. ஏனென்றால், எனது சகோதரி இந்த அளவு அன்பு செலுத்துகின்ற, ஒத்துழைப்பு வழங்குகின்ற மக்களுடன் மற்றும் மக்களுக்குத் தொண்டு செய்கின்றவர்களுடன் இணைந்துள்ளார். எந்த விஷயங்களை நான் இன்று கற்றுக் கொண்டேனோ அவற்றால் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.

◗ பிராம்டனின் முன்னாள் மேயரான சோஸன் ∴பேனல் அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கின்றார்கள்:

நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை கடந்த 30 வருடங்களாக அறிவேன். கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் கலந்து கொண்டுள்ள பல நிகழ்ச்சிகளில் நானும் கலந்து கொண்டிருக்கின்றேன். இன்றைய நிகழ்ச்சிகளில் நான் அழைக்கப்பட்டிருப்பது எனது கண்ணியத்திற்கு காரணமாக இருக்கின்றது. ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தி எப்போதுமே அமைதியின் உறைவிடமாக இருக்கின்றது. அது 'எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு' என்ற அறிவிப்பைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது. நான் மக்களிடம் அதிலும் குறிப்பாக அல்லாஹ்வின் தூதுச் செய்தியைப் புரிந்து கொள்ளாத மக்களிடம் இதைக் கூற விரும்புகின்றேன். ஹுஸூர் அவர்களின் இந்த தூதுச் செய்தி அமைதியின் தூதுச் செய்தியாகும். இதில் மக்களுக்கோ அல்லது விலங்குகளுக்கோ அல்லது உயிருள்ள எந்த ஒன்றுக்கும் இழப்பை ஏற்படுத்தக் கூடிய எந்த விஷயமும் இல்லை. இந்த இறைவனின் தூதுச் செய்தி நம் அனைவருக்கும் உரியதாகும்.

◗ Referend Robert Layeel (Minister of St. Andrew's Presbylerian Church) அவர்கள் தமது கருத்துகளைத் தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் இன்றைய சொற்பொழிவைக் கேட்டு மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இதற்கு ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தியே காரணமாக இருந்தது. அதில் அமைதி, நேசம் மற்றும் நம்பிக்கையின் தூதுச் செய்தி இருந்தது. இது எத்தகைய தூதுச் செய்தி என்றால் அதற்கு நிறம், இனம், கிழக்கு, மேற்கு, குறிப்பிட்ட நேரம் அல்லது இடம் ஆகியவற்றுடன் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக, இது முழு உலகிலுள்ள மக்களுக்காகவும் தரப்பட்ட தூதுச் செய்தியாகும். இந்த சொற்பொழிவிற்கு இவ்வாறு முக்கியத்துவம் இருக்கின்றது. அதாவது, உலகில் பல தவறான தகவல்களும், வதந்திகளும், அச்சமும், பீதியும் பரவியிருக்கின்றது. ஆனால், இன்றைய தூதுச் செய்தியில் இந்த விஷயம் மிகவும் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது நமக்கு இடையில் நாம் ஒன்றுபடுவதற்கான பல விஷயங்கள் இருக்கின்றன. கருத்து வேறுபாடுள்ள விஷயங்கள் குறைவாகவே இருக்கின்றன. இது ஒரு மகத்தான நற்செய்தி ஆகும். இதை மக்கள் கேட்க வேண்டியது அவசியமாகும்.

◗ டாக்டர் ஜயான் பர்க் அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்கள்:

நான் ஹுஸூர் அவர்களுக்காக எனது நல்ல விருப்பங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவை மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக உணர்ந்தேன். அவர்களது தூதுச் செய்தி அன்பு மற்றும் நீதியின் தூதுச் செய்தியாக இருந்தது. ஹுஸூர் அவர்களின் இந்த தூதுச் செய்தி மேலும் பரவ வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 4 May 2017 Issue No. 18

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

◗ டோரான்டோவில் ஆசிரியராக பணி புரிகின்ற Alma அவர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்:

ஹுஸூர் அவர்கள் உலகம் முழுவதற்கும் வழங்கியுள்ள இந்த அமைதியின் தூதுச் செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தரக் கூடிய விஷயமாக இருக்கின்றது என்பது எனது கருத்தாகும். அவர்கள் தமது தூதுச் செய்தியை முஸ்லிம்களுக்காக மட்டும் கூறவில்லை. மாறாக எல்லா நிறம் மற்றும் இனத்தைச் சார்ந்த மக்களுக்காகவும் அவர்களது தூதுச் செய்தி இருக்கின்றது. அவர்களது தூதுச் செய்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாம் உலகின் நிலைமைகளை ஆய்வு செய்வதாக இருந்தால் அதன் அடிப்படையில் பார்க்கும்போது இது மிகவும் தெளிவான தூதுச் செய்தியாகும். எல்லாரும் இதனைக் கேட்க வேண்டும்.

◗ கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்தின் துணைப் பேராசிரியரான மாஸ்மோ ஜினோபால் அவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள்: எப்போதெல்லாம் எனக்கு இதுபோன்ற வலுவான சொற்பொழிவைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அந்த நிகழ்ச்சியில் நான் கண்டிப்பாகக் கலந்து கொள்கின்றேன். கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவில் அத்தகைய பல விஷயங்கள் உள்ளன. அவற்றை நான் சுயமாகவும் ஏற்றுக் கொள்கின்றேன். இதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

◗ Mayil Association of Entariyo -வின் தலைவரான முஹம்மது அல்ஹவ்வாஜி அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்:

இன்றைய தூதுச் செய்தி மிகவும் விளக்கமான தூதுச் செய்தியாக இருந்தது. நாம் அனைவரும் அன்புடன் இருக்க வேண்டும். நாம் எவரிடமும் வெறுப்பைக் காட்ட வேண்டிய அவசியமில்லை. நாம் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் பிறகு நாம் அமைதியை நிலைநாட்ட முடியாது. நான் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவை பாராளுமன்றத்தில் கேட்டபோது பாராளுமன்றத்தில் இவ்வாறு பேசக் கூடிய முஸ்லிம் தலைவர் இருக்கின்றார் என்று எனக்கு நம்பிக்கையே ஏற்படாமல் இருந்தது. ஹுஸூர் அவர்களிடம் அச்சத்தின் எந்த ஓர் அம்சமும் தென்படவில்லை. அவர்கள் மிகவும் தைரியமாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இதுவே இஸ்லாத்தின் சரியான உண்மையான தூதுச் செய்தியாகும் என்பதில் மக்களுக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. இந்தப் போர்கள் நடப்பதற்குப் பின்னால் சில மக்கள் உள்ளனர். அவர்கள் அதிலிருந்து பயனடைகின்றனர் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். இன்றைய சொற்பொழிவில் ஹுஸூர் அவர்கள் 'எல்லாரிடத்திலும் அன்பு; எவரிமும் இல்லை வெறுப்பு' என்பதைப் பற்றியே பேசினார்கள். இதுவே அனைவரது செயல் திட்டமாவும் இருக்க வேண்டும். இதுவே உண்மையாகும். நான் 1980 -லிருந்து அஹ்மதி முஸ்லிமாக இருக்கின்றேன். கடந்த 15 வருடங்களாக நான் ஜமாஅத்தை விட்டு விலகிச் சென்று விட்டேன். ஆனால் நான் ஆலிம்களுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும என்ற எண்ணம் இப்போது எனக்கு வந்திருக்கின்றது.

◗ Uganda Mother Church -ஐச் சார்ந்த சாயினா அலூயி அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கின்றார்கள்:

கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் இன்றைய தூதுச் செய்தி பிறரை மன்னிப்பது, கண்டும் காணாமல் இருப்பது, அமைதியை நிலைநாட்டுவது பற்றியதாக இருந்தது. குறிப்பாக எல்லா மதங்களும் ஓர் இறைவனை ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் அவை பல்வேறு பெயர்களில் அவனை நினைவு கூர்கின்றன. ஹுஸூர் அவர்கள் குறிப்பாக முஸ்லிம்களுக்கு நீங்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கு அதிகமாக முயற்சி செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இதைக் கேட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

◗ சுரீந்தர் சித்து என்ற விருந்தினர் தமது கருத்துக்களை இவ்வாறு கூறினார்:

ஹுஸூர் அவர்களது சொற்பொழிவின் காரணமாக இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. இந்த சொற்பொழிவில் அவர்கள் அமைதி, அன்பு மற்றும் முழு உலகின் சிறப்பான நிலைமை ஆகியவை தொடர்பாக விஷயங்களைப் பேசினார்கள்.

◗ Feedel (∴பீடல்) என்ற பெயரை உடைய ஒரு மாணவர் தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்திக் கூறினார்:

எல்லா நிகழ்ச்சிகளும், ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவும் மிகவும் சிறப்பாக இருந்தது. அது எனது உள்ளத்தில் இறங்கி விட்டது. ஹுஸூர் அவர்களுடன் ஏற்பட்ட சந்திப்பைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கு என்னிடம் சொற்கள் இல்லை. இது எனது வாழ்வின் மிகவும் முக்கியமான அனுபவமாக இருந்தது.

◗ ∴பரஷ்தா என்ற ஷியா பிரிவைச் சார்ந்த முஸ்லிம் மாணவர் தமது கருத்துக்களை இவ்வாறு கூறுகின்றார்:

ஹுஸூர் அவர்களின் இஸ்லாம் மற்றும் அமைதி தொடர்பான சொற்பொழிவு முற்றிலும் எனது சிந்தனைக்கேற்பவே இருந்தது. ஹுஸூர் அவர்களின் முகத்தில் வெளிப்படுகின்ற ஒளி மிகவும் அழகாக இருந்தது.

◗ கொத் கால்வே, டீனா கால்வே ஆகியோர் தமது கருத்துக்களை இவ்வாறு கூறியுள்ளனர்:

மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தூதுச் செய்தியாக அது இருந்தது. நாம் அன்றாடம் உலகில் தினந்தோறும் காணும் விஷயங்களை விட்டும் மாறுபட்டு நிற்கின்ற ஒரு மகிழ்ச்சிகரமான மாற்றமாக இந்த நிகழ்ச்சி இருந்தது.

*(தொடரும்)*

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஏனெனில், ஊழியன் ஒருவன் தன் எஜமானரிலிருந்து வேறுபட்டவன் அல்லன். மரக்கிளையானது தனது வேரிலிருந்து வேறுபட்டதல்ல. எனவே, எவர் முழுமையாகத் தன் எஜமானரிடத்தில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு அதன் மூலம் இறைவனிடமிருந்து நபிப் பட்டத்தை பெறுகின்றாரோ அவர் 'கத்முன் நுபுவ்வத்' -திற்கு ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர் அல்லர். இது எவ்வாறென்றால், நீங்கள் உங்களது உருவத்தை நிலைக் கண்ணாடியில் பார்ப்பதுபோலாகும். அதில் தெரியும் உருவத்தால் நீங்கள் இருவேறு பட்டவர்களாக ஆக முடியாது. வெளிப்படையில் நீங்கள் இருவராகத் தென்பட்டாலும் நீங்கள் ஒருவரே. இது அசலுக்கும் நிழலுக்கும் இடைப்பட்ட வேறுபாடு மட்டுமேயாகும்.

ஆகவே, வாக்களிக்கப்பட்ட மஸீஹிடமும் இவ்வாறே இறைவன் விரும்பினான். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் எனது மண்ணறையில் (கபரில்) அடக்கம் செய்யப்படுவார் என்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியதன் இரகசியம் இதுவேயாகும். அதாவது, அது நானாகவே இருக்கிறேன். மேலும் இதில் இரு உருவ வேறுபாடுகள் உண்டாவதில்லை.

ஈசப்னு மர்யம் (மர்யமின் மகனாகிய ஈஸா) மரணமடைந்து விட்டார் என்பதையும், அவரது மண்ணறை காஷ்மீரின் ஸ்ரீநகரிலுள்ள கான்யார் வீதியில் இருப்பதையும் உறுதியுடன் அறிந்து கொள்ளுங்கள். இறைவன் தனது புனித வேதத்தில் அவர் மரணித்துப் போனதாக அறிவித்துள்ளான்.

(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad